## <u>சுருக்கம்</u>

நெடுஞ்சாலைகள் –கோயம்புத்தூர் மாவட்டம் – திருப்பூர் நகரம் – ரூ.70 கோடி செலவில் திருப்பூர் நகர சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாடு செய்தல் மற்றும் சுற்றுச் சாலைகள் அமைத்தல் – நிர்வாக ஒப்புதல் அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (எச்எஸ்2) துறை

அரசாணை (நிலை ) எண்.214 நாள் : 11/10/2006

<u>படிக்கவும்</u>

1) அரசாணை (நிலை) எண். 250 , நெடுஞ்சாலை (எச்டபிள்யூ2) துறை நாள் 19.12.1996.

<u>மீண்டும் படிக்கவும்</u>

2) தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கடித எண். 45084/ திட்டம் 2/ 2005 நாள் 8.1.2006.
3) தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கடித எண். 45084/ திட்டம் 2/ 2005 நாள் 20.2.2006.

-------

<u>ஆணை :</u>

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கோயம்புத்தூர் மாவட்டம் திருப்பூர் நகரில் உள்ள சாலைகள் மற்றும் நகரை சுற்றியுள்ள சாலைகளை மேம்படுத்தும் பணிக்காக ரூ.15 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை அவர்கள் திருப்பூர் நகரில் உள்ள நகர சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் சுற்றுச் சாலைகள் அமைப்பது தொடர்பாக ரூ. 43.58 கோடி மதிப்பீட்டிற்கான கருத்துருவை அனுப்பினார். இது தொடர்பாக அரசு அளவில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தை தொடர்ந்து, திருப்பூர் நகரின் சுற்றுச் சாலை அமைத்தல் திட்டத்தின் கீழ் விடுபட்ட வேலைகள், இரண்டு இருப்புப் பாதை மேம்பாலங்கள், மூன்று உயர்மட்டப் பாலங்கள், ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 14 கிமீ நீளமுள்ள 9 சாலைகள் மற்றும் திருப்பூர் நகரத்திலுள்ள நகர சாலைகளை உள் கட்டமைப்பு மேம்பாடு செய்தல் தொடர்பாக ரூ. 70.00 கோடி மதிப்பீட்டிலான திருத்திய கருத்துருவை பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (பொது) , நெடுஞ்சாலைத் துறை அவர்கள் அரசுக்கு அனுப்பினார்.

3. திருப்பூர் நகரம் தமிழ்நாட்டிலேயே மிகவும் அதிக தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் நகரம் ஆகும். இந்நகரத்தில் உள்ள 500 பனியன் கம்பெனிகள் மற்றும் சுமார் 2000 – த்திற்கும் மேற்பட்ட துணை தொழிற்சாலைகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருப்பூர் நகர மற்றும் திருப்பூரைச் சுற்றியுள்ள கிராம

மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் நிலையான அந்நியச் செலாவணித் தொகையாக சுமார் ரூ. 5000/– கோடிக்கும் அதிகமான தொகையினை திருப்பூர் நகரம் ஈட்டித் தருகிறது. தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் மற்றும் விற்பனை பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு திருப்பூர் நகர சாலைகளை மேம்பாடு செய்தல் அவசியமானதாகும் என்று தலைமைப் பொறியாளர் (பொது) , நெடுஞ்சாலை அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்.

4. திருப்பூர் நகர சாலை உள்கட்டமைப்பு மேம்பாடு செய்யும் திட்டத்தில், கீழ்காணும் சாலைகள் மற்றும் பாலப் பணிகளை ரூ. 70.00 கோடி செலவில் மேம்பாடு செய்வதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ. எண் | சாலையின் வகை | எண்ணிக்கை | நீளம் (கிமீ) | தொகை (ரூ கோடியில்) |
|---|---|---|---|---|
| 1) | மாநில நெடுஞ்சாலைகள் | 3 | 27.800 | 21.67 |
| 2) | மாவட்ட முக்கியச் சாலைகள் | 2 | 6.200 | 5.21 |
| 3) | மாவட்ட இதர சாலைகள் | 9 | 36.600 | 7.05 |
| 4) | சுற்றுச் சாலைகள் (மாவட்ட இதர சாலைகள்) | 3 | 14.000 | 4.25 |
| 5) | ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் | 9 | 14.000 | 4.52 |
| 6) | சாலை மேம்பாலங்கள் –புதிய பாலங்கள் – பழைய பாலங்கள் அகலப்படுத்துதல் மற்றும் சிறு பாலங்கள் அகலப்படுத்துதல் | 8 | ––– | 27.30 |
| **மொத்தம்** | | | **98.600** | **70.00** |

5. தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை அவர்களின் செயற்குறிப்பு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு அதனை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. மேலே பத்தி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இணைப்பில் காணும் பல்வேறு சாலைகளை மேம்படுத்தி சுற்றுச் சாலை அமைப்பதற்கும், சாலை மேம்பாலங்கள் மற்றும் உயர் மட்டப் பாலங்களை ரூ. 70.00 கோடிக்கு (ரூபாய் எழுபது கோடி மட்டும்) மதிப்பீட்டில் அமைப்பதற்கும் நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. சுற்றுச் சாலை அமைத்த பிறகு நெடுஞ்சாலைத் துறையால் எடுத்து மேம்பாடு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 9 சாலைகளை, எதிர்கால பராமரிப்பிற்காக நெடுஞ்சாலைத் துறையே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இது குறித்த தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி 5ல் ஒப்புதளிக்கப்பட்ட செலவினம், கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

| வ. எண் | சாலையின் வகை | மொத்த நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படும் தொகை (கோடியில்) | 2006–07 திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை (கோடியில்) | கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|
| 1) | மாநிலச் சாலைகள் (3) | 21.67 | 10.45 | 5054 சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு–03. மாநில நெடுஞ்சாலைகள் – 337. சாலைப் பணிகள் – பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் –II-மாநிலத்திட்டம் – JI. மாநில நெடுஞ்சாலைகளுக்கான விரிவான சாலை மேம்பாட்டுத்திட்டம் – 16. பெரும் பணிகள் (து.தொ.கு. எண். 5054 03 337 JI 1602) |
| 2) | மாவட்ட முக்கியச் சாலைகள் ((2) | 5.21 | 3.50 | 5054. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 04. மாவட்டச் சாலைகளும் ஏனைய சாலைகளும்– 337. சாலைப் பணிகள் – பத்தாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II – மாநிலத் திட்டம் – JT –. மாவட்டப் பெருஞ்சாலைகளுக்கான விரிவான சாலை மேம்பாட்டுத் திட்டம்–16. பெரும் பணிகள் (து.தொ.கு.எண்.5054 04 337 JT 1609) |
| 3) | மாவட்ட இதர சாலைகள் (9) | 7.05 | 14.05 | 5054. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 04. மாவட்ட சாலைகளும் ஏனைய சாலைகளும் – 337. சாலைப் பணிகள்– பத்தாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள். II –மாநிலத் திட்டம் – JU – ஏனைய மாவட்டச் சாலைகளுக்கான விரிவான சாலை மேம்பாட்டுத் திட்டம் – 16. பெரும் பணிகள் (து.தொ.கு.எண். 5054 04 337 JT 1609) |
| 4) | சுற்றுச் சாலைகள் (மாவட்ட இதர சாலைகள்) (3) | 4.25 | | |
| 5) | ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் (9) | 4.52 | | |
| 6)<br>7) | சாலை மேம்பாலங்கள்<br>8 உயர்மட்டப் பாலங்கள் | 27.30 | | |
| **மொத்தம்** | | **70.00** | **28.00** | |

2007 – 08 ம் ஆண்டிற்கு தேவையான நிதியொதுக்கம் 2007–2008 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் 2006–2007 ம் ஆண்டிற்கு கூடுதல் நிதியொதுக்கம் ஏதும் தேவைப்படின் RE 2006 – 07 க்கு உரிய பிரேரணையினை நிதித்துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (பொது) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை, நிதித் துறையின் ஒப்புதலுடன், அத்துறையின் அ.சா.கு எண். 259 து.செ. (பட்ஜெட்) பொ.ப. 1 / 06 நாள் 22/9/2006 ன் படி வெளியிடப்படுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி/

கா. அலாவுதீன்
அரசு செயலாளர்

**பெறுநர்**

1) தலைமைப் பொறியாளர் (பொது) ,நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5 (இ)
2) திரு. கே. சுப்பராயன், பாராளுமன்ற உறுப்பினர், கோயம்புத்தூர் தொகுதி,
   502 , பி.என். சாலை , திருப்பூர் – 641 602 (இ)
3) நிதி (பொ.ப 1 துறை) , சென்னை–9 (இ)
4) செயலர், ஊரக வளர்ச்சித் துறை சென்னை–9 (இ)
5) செயலர் , நிதித் துறை, சென்னை–9 (இ)
6) அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9 (இ)
7) மாண்புமிகு அமைச்சர், (நெடுஞ்சாலை) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை –9(இ)
8) மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9 (இ)
9) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9 (இ)

**நகல்**

நெடுஞ்சாலைத் துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை–9
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்